**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. ம.சி.கண்ணதாசன், எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்

**2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 22 ஆம் நாள் புதன் கிழமை**
**திருவள்ளுவர் ஆண்டு 2057 ஆடி மாதம் 06 ம் நாள்**
**அசல் வழக்கு எண் – 158/2022**
**CNR NO: TNAL050001802022**

காந்தி குடும்ப மேனேஜர் என்ற முறையில் – வாதி

/எதிர்/

1) தமிழக அரசின் பிரதிநிதியாக மாவட்ட ஆட்சியர், அரியலூர்
2) வட்டாரவளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) தா.பழூர்
3) வருவாய் வட்டாட்சியர், ஜெயங்கொண்டம்
4) வட்ட நில அளவையர், ஜெயங்கொண்டம். – பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 22.07.2026 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.திருமாவளவன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் இவ்வழக்கில் தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**தீர்ப்புரை**

வாதிக்கு பாத்தியமான வழக்கு சொத்துக்களின் அத்தில் உள்ள உயிர்கள்ளி மற்றும் மரங்கள் கொண்ட வேலியை பிரதிவாதிகளோ அல்லது அவர்களது ஆட்களோ, ஏஜெண்டுகளோ, வெட்டாமல் இருக்கும் வகையில் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா செலவுத் தொகை வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்க வேண்டியும், வாதி தரப்பில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதி அழைத்தும் ஆஜரில்லை. வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். இன்று இவ்வழக்கு எதிரவர் இல்லா சாட்சியத்திற்காக போடப்பட்டிருந்தது. நிபந்தனைகளுடன் கூடிய உத்தரவிட்ட நிலையில் வாதி இவ்வழக்கை தொடங்க முன்வரவில்லை. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 22 ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/ம.சி.கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**<u>வாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

–இல்லை–

**<u>பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

–இல்லை–

ஒப்பம்/ம.சி.கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.